
# பர்திமேயுவையும் பிறரையும் இயேசு குணப்படுத்தினார்
# நோயாளிகள் குணமாக கிறிஸ்தவர்கள் ஜெபிக்கின்றனர்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் H2b பாடத்தைப் படிக்கவும்.



**ஜெபம்:** "பரலோகத் தந்தையே, விசுவாசிகளாகிய எங்கள் மேல் உமக்கிருக்கும் அன்பு ஒரு நாளும் குறையாது. எங்கள் மந்தை நோயுற்று வருந்தும் வேளையில் உம்மையே நம்ப உதவுவீராக."

**1. நோயாளிகளுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் ஊழியம் செய்யும்படி உங்கள் மந்தையை வழிநடத்த ஆயத்தமாகுக**

எங்கு மக்கள் பெருவாரியாகக் கிறிஸ்தவ விசுவாசிகள் ஆகி, புதிய மந்தைகள் ஸ்தாபிக்கப்படுகின்றனவோ அங்கு உடல்ரீதியான குணமாக்குதல் என்பது சுவிசேஷம் அறிவித்தல் மற்றும் சபையாகிய சரீர வாழ்க்கையின் இயல்பான ஒரு பகுதியே ஆகும்.

விசுவாசிகள் நோய்வாய்ப்படும் போதோ அல்லது துன்பப்படும்போதோ அதற்கு எப்போதும் தேவன் ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறார். தேவ நோக்கத்தை அறிந்து அவரை வாசிக்கும்படி மக்களுக்கு உதவி செய்வதே நமது பணியாகும்.

**மாற்கு 10:46-52** ல் காண்க:

- பர்திமேயுவின் துன்பம் எப்படிப்பட்டது?
- மக்களுக்கு இயேசுவால் என்ன செய்ய முடியும் என்று பர்திமேயு நம்பினான்?
- பர்திமேயுவின் வேண்டுகோள் என்ன?
- பர்திமேயுவின் கோரிக்கையை நிறைவேற்றத் தக்கதாக இயேசு அவனிடத்தில் கண்டது என்ன?

**யோவான் 9 ஆம் அதிகாரத்தில்** காண்க:

- அந்த மனிதன் குருடனாய்ப் பிறந்ததற்கான தேவ நோக்கம் என்ன? (1-3)
- குணமாவதற்காக அந்தக் குருடன் என்ன செய்ய வேண்டி இருந்தது? (6-11)
- குருடன் தன்னைப் பற்றிய எதை விசுவாசிக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார் (35-38).
- இயேசுவை விசுவாசிக்க மறுத்தவர்களிடம் இருந்த தேவ நோக்கம் என்ன? (39-41)

**எபிரேய 12:5-14** ல் காண்க:

- துன்பப்படும் விசுவாசிகளை தேவன் எவ்வாறு நோக்கிப் பார்க்கிறார் (வச. 5-8).
- நமது துன்பத்தில் இருந்து தேவன் வெளிக்கொண்டு வர விரும்பும் நன்மைகள் எவை (9-11)
- நமது நடத்தைகள் முடமாய் இருந்தால் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை (13)
- நாம் பிறரை மோசமாக நடத்தினால் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை (14)

**யாக்கோபு 5:13-20** ல் காண்க:

- துன்பப்படும் போது விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும்? (13)
- நோயாளிகளாக இருக்கும்போது விசுவாசிகள் செய்ய வேண்டியது என்ன? (14)
- நோயாளிகளான விசுவாசிகளுக்காக சபைத் தலைவர்கள் செய்ய வேண்டியது என்ன? (14)
- நோயாளிகளான விசுவாசிகள் பாவம் செய்திருந்தால் செய்ய வேண்டியது என்ன? (15)

- நோயாளிகளான விசுவாசிகளை குணமாக்கக் கூடிய ஜெபம் எது? (15)
- ஒரு பாவி சத்தியத்துக்குள் திரும்பி வரும்போது என்ன நடக்கிறது (19-20).

## 2. வரும் வாரத்துக்கான நடவடிக்கைகளை உங்கள் உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக

ஒரு வீட்டிற்கு நீங்கள் செல்லும்போது, அங்குள்ள யாராவது நோய்வாய்ப்பட்டிருந்தால், தேவனுடைய இரக்கத்துக்கும் வல்லமைக்கும் சாட்சியாக அவர் நலம் பெற ஜெபிப்போம் என்று கூறுங்கள். வீடுகளுக்கு செல்லும்போது சபைத் தலைவர் ஒரு சிறிய குப்பியில் நோயாளிகளின் தலையில் பூசுவதற்காக சுத்தமான எண்ணெய் வைத்திருக்க வேண்டும்.

உங்கள் மந்தையில் உள்ள நோயாளிகளையும், துன்பப்படுபவர்களையும் சென்று சந்தித்து, ஆலோசனை கூறி அவர்களுக்காக ஜெபிக்கவும்.

### குணமாக்க வழிகாட்டுதல்கள்

நோயாளிகளுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் ஜெபிக்க செல்லும்போது பின்பற்ற வேண்டிய சில வழிகாட்டுதல்கள்.

அ) நோயாளிகளுக்காக ஜெபித்து முடிகிறவரை செல்லும் வழியில் உணவு, பானம் அல்லது வேறு வேலைகளுக்காக நிற்க வேண்டாம்.

ஆ) நோயாளியான விசுவாசியின் நடத்தை, உறவுகள், மத நடிவடிக்கைகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்து கொள்ள, நோயாளியிடமும் அவரது குடும்பத்தினரிடமும் பேசுங்கள். இது, உடல் சம்பந்தமான நோய்க்கான ஆவிக்குரிய காரணங்களை அறிந்து கொள்ள உங்களுக்கு உதவலாம்.

இ) நோயின் காரணத்தைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் கூறுவதையும், நோயாளிக்கு தேவன் செய்ய விரும்புவதையும் கவனமாகக் கேளுங்கள்.

ஈ) மூன்று வகையான நோய்கள் இருப்பதை நோயாளிக்கு விளக்கவும்

- நியாயத்தீர்ப்புக்கான நோய், ஏனெனில் நமது நடத்தையும் உறவும் தேவனுக்கு உகந்ததாக இல்லை.
- மரணத்திற்கான நோய், ஏனெனில் கர்த்தரோடு போய் இருக்கக் காலம் கனிந்து விட்டது.
- தேவ மகிமைக்கான நோய், ஏனெனில் குணமாக்குவதின் மூலம் தேவன் தமது வல்லமையைக் காட்ட விரும்புகிறார்.

உ) தங்கள் பாவத்தை அறிக்கையிட நோயாளிக்கும் குடும்பத்துக்கும், ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். யாராவது பாவத்தை அறிக்கையிட்டால் தேவன் அவர்களது பாவத்தை மன்னித்துவிட்டார் என்பதைக் கூறவும்.

ஊ) நோயின் காரணத்தை அறிந்து கொண்ட பின், எவ்வாறு நீதியாக நடப்பது என்பது பற்றியும் மற்றவர்களோடு உறவை எவ்வாறு வளர்ப்பது என்பது பற்றியும் நோயாளிக்கு ஆலோசனை கூறவும்.

எ) நோயாளிக்காக ஜெபிக்கவும். நோயாளியை குணப்படுத்த தேவன் விரும்புகிறார் என்பதை உணர்ந்தால், எண்ணெய் பூசி குணப்படுத்துமாறு தேவனை நோக்கி வேண்டவும் (மருத்துவர்களுக்காகவும் மருந்துக்காகவும் ஜெபிப்பது மட்டும் போதாது). இப்போது தேவன் அந்த நோயாளியை சுகமாக்க விரும்புவதாக நீங்கள் உணரவில்லை என்றால், அவரை தேவன் ஆசீர்வதிக்குமாறு விசுவாசத்தோடும், பொறுமையோடும், மகிழ்ச்சியோடும் ஜெபிக்கவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

இயேசுவின் நாமத்தினால் தேவன் நோயாளியை எவ்வாறு சுகமாக்குகிறார் என்பதை நீங்கள் புரிந்து கொண்ட விதமாக விளக்கவும்.

**லூக்.** 17:11-19 ல் இருந்து பத்து குஷ்டரோகிகளைப் பற்றிய கதையை வாசிக்கவும்.



இயேசு பத்து குஷ்டரோகிகளை குணமாக்கினார். அவர்களில் ஒருவனே திரும்பி வந்து நன்றி கூறினான்.

விசுவாசிகள் சமீபத்தில் தாங்கள் கண்ட சுகமாக்குதலைப் பற்றி சாட்சி கூறட்டும்.

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை, கேள்விகளை வழங்கலாம்.

யாத்திராகமம் 16 ஆம் அதிகாரத்தில் இருந்து தேவன் இஸ்ரவேலருக்கு வழங்கிய அற்புதமான அப்பமாகிய மன்னாவின் கதையைக் கூறி கர்த்தரின் பந்தியை ஆசரிக்கவும்.

வானத்தில் இருந்து வந்த மெய்யான அப்பம் இயேசுவே என்பதையும், **கர்த்தரின் பந்தியில்** விசுவாசத்தோடு பங்கு கொள்ளும்போது நாம் அவரது ஜீவனருளும் வல்லமையில் மகிழ்கிறோம்.

1 **பேதுரு 2:24** ஐ மனனம் செய்க.

ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும் **சிறு குழுக்களை** விசுவாசிகள் அமைக்கவும்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net